**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS.No.200/2021</u>**

நாள் 07.01.2025.

PW1 – மணி

க/பெ – சின்னசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 7th day of January 2025.)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவா சொத்துக்களில் எந்தெந்த சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும், எந்தெந்த சொத்து எனது தந்தை வழி தாத்தா கிரையம் பெற்ற சொத்து என்றும், எனது அப்பா எந்த சொத்தை கிரையம் பெற்றார் என்றும் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால், மொத்தமாக தான் சொல்லியுள்ளேன். எனது தந்தை ராமசாமி கிரையம் பெற்ற சொத்தை அவர் எனது உடன் பிறந்த சகோதரர் சாமிநாதன் பெயருக்கு 15.03.2010–ம் தேதியில் ஒரு பதிவு செய்த உயில் ஆவணத்தை எழுதி வைத்துள்ளார் என்றால் அது எனக்குத் தெரியாது. அதேபோல் எனது தாத்தா லட்சுமண கவுண்டரும், எனது தந்தையாரும் பாகம் பிரித்து கொண்ட சொத்தை பொறுத்து எனது அப்பா ராமசாமி எனது சகோதரர் சாமிநாதன் பெயருக்கு கடந்த 15.03.2010–ம் தேதியிட்ட பதிவு தான செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது எனக்குத் தெரியாது. மேற்படி வீதம் வந்த சொத்தை சாமிநாதன் தான் அனுபவித்து வந்து அவரது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. நானும் எனது சகோதரியும் சேர்ந்து தான் இந்த பாக தாவாவை தாக்கல் செய்துள்ளோம். எனது சகோதரி 2–ம் வாதி பாகம் கேட்டு எனக்கும்,

எனது சகோதரர் சாமிநாதன் மற்றும் எங்களது தந்தை ராமசாமிக்கும் சட்ட அறிவிப்பு ஒன்றை அனுப்பினார் என்றால் சரிதான். அந்த சட்ட அறிவிப்பற்கு எனது சகோதரர் சாமிநாதன் 11.03.2011–ம் தேதியில் பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் மேற்படி பதிவு உயில் ஆவணம் மற்றும் பதிவு தான செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டது குறித்து குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பின்பு எனது சகோதரி மீண்டும் கடந்த 17.10.2016–ம் தேதியில் பாகம் கேட்டு எங்களுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு சாமிநாதன் 24.10.2016–ம் தேதியில் மேற்படி உண்மை விபரங்களை சொல்லி பதில் அறிவிப்பு ஒன்றை அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு பின்பு நானும் எனது சகேதாரியும் சேர்ந்து 01.08.2021–ம் தேதியில் மீண்டும் பாகம் கேட்டு சட்ட அறிவிப்பை அனுப்பினோம் என்றால் சரிதான். மேற்படி சட்ட அறிவிப்பில் மேற்படி உயில் ஆவணம் மற்றும் பதிவு தான செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றி 11.03.2011–ம் தேதியிட்ட பதில் அறிவிப்பிலேயே சாமிநாதன் கூறியுள்ள நிலையில் மேற்படி ஆவணங்களுக்கு எதிராக மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

3. மேற்படி வீதம் சாமிநாதன் பெயரில் உள்ள தாவா சொத்தை பொறுத்து உயில் ஆவணமும், செட்டில்மெண்ட் ஆவணமும் ஏற்பட்டுள்ள விபரம் 2011–ஆம் ஆண்டிலேயே எங்களுக்கு தெரியவந்துள்ள நிலையில் அந்த ஆவணங்களுக்கு எதிராக மூன்று வருட காலத்திற்குள்ளாக வழக்கு தாக்கல் செய்யாமல் காலம் கடந்து 2021–ஆம் ஆண்டில் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.01.07 19:46:40 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**